Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 173/2024 PW-1**

Name : நந்தினி
Father / Husband name : மனோகரன்
Village : பாஞ்சாலம்
Age : 30
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.04.2026

A1 absent. Petition u/s 317 CrPC filed and allowed. A2, A3 present. Defence counsel present. Witness identified by HC 2735 Palanivel.

**<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எதிரிகள் அனைவரும் எனது கணவரின் பங்காளிகள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் எங்கள் தெருவில் கடைசி வீடு எங்களுடையது என்றால் சரிதான். எனது வீட்டின் அருகில் எங்களுக்கு சொந்தமான கொட்டகை இருந்தது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு எதிரில் 1வது எதிரி வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் அருகில் சிறிய நிகழ்ச்சி செய்வதற்கு இடம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் தெரு முனையின் பக்கத்தில் தான் பாலம் பக்கத்தில் மைதானம் உள்ளது என்றால் சரிதான். மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து அந்த பாலத்திற்கு சுமார் 20, 25 அடி நீளம் இருக்கும் என்றால் சரிதான். அ.சா.5 சுனில் என்பவருக்கு சம்பவ சமயத்தில் 21 வயது இருக்கும் என்றால் சரிதான்.

2. அன்றையதினம் ஊரிலுள்ளவர்கள் மற்றும் எதிரிகள் மாலை 6 மணிக்கு New year கொண்டாடத்திற்கு ஏற்பாடு செய்தார்கள் என்றால் சரிதான். எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்வதற்கு முன்பே காவல் நிலையம் சென்றேன்

என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எங்களை விசாரித்துவிட்டு கையொப்பம் வாங்கிக்கொண்டு மருத்துவமனைக்கு செல்லுமாறு சொன்னார்கள் என்றால் கையொப்பம் செய்யவில்லை, விசாரித்துவிட்டு மருத்துவமனைக்கு செல்லுமாறு சொன்னார்கள். மருத்துவமனையிலிருந்த போலிசார் வந்து எங்களை விசாரித்தார்களா என்றால் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் விசாரித்தார்கள். 4 நாட்களுக்கு பிறகு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது விசாரித்து 2, 3 கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். புகாரை யார் எழுதினார்களா என்றால் வழக்கறிஞர் எழுதினார். வழக்கறிஞர் எழுதி கையெர்பபம் வாங்கி காவல் நிலையத்தில் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

3. அதன் பின்னர் காவல் நிலையத்தில் போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அதன்பின்பு சாட்சியம் அளிக்க தான் வந்தேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது சாட்சிகள் வேண்டும்என்று உறவினர்களிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அப்போது உறவினர்கள் 10, 15 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது பச்சையப்பன், சுதாகர் ஆகியோர்கள் என்னுடன் இருந்தார்கள் என்றால் சரிதான். பொதுயிடத்தில் பாட்டு போடவேண்டுமென்றால் போலிசாரிடம் அனுமதி கேட்கவேண்டும் என்பது தெரியுமா என்றால் வருட, வருடம் பாட்டு போடுவோம், சம்பவ சமயத்தில் அனுமதி வாங்கவில்லை. சம்பவயிடத்தில் பாட்டுப்போடும்போது எங்கள் குடும்பத்தார் மட்டும் இருந்தோம் என்றால் சரியல்ல, தெருவிலுள்ள அனைவரும் இருந்தோம்.

4. புருசோத், வேலு, லோகசாதன், தேனப்பன், குமார், முத்துக்கிருஷ்ணன், அன்பு, மகேந்திரன் ஆகிய எங்கள் தெருவிலிருப்பவர்கள் என்றால் சரிதான். எனது கணவர் மருத்துவமனையில் சிகிச்சையின்போது 4 நபர்கள் அடித்ததாக சொல்லியுள்ளார் என்றால் இல்லை, 3 நபர்கள் அடித்ததாக சொல்லியுள்ளார். அந்த

கிரவுண்டில் பாட்டுப்போட்டவர்களும் எங்கள் தெருவை சேர்ந்தவர்கள் என்றால் இல்லை, அவர்கள் அந்த வருடம் தான் முதன் முதலில் அங்கு பாட்டுப்போட்டார்கள். எனது முதல் விசாரணையில் நாங்கள் வருடந்தோறும் பாட்டுப்போடுவதாகவும், எதிரிகள் அந்த வருடம் தான் முதலில் பாட்டுப்போட்டார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் பாட்டுப்போடுவது சம்மந்தமாக போலிசாருக்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. எனக்கு சம்பவம் பற்றிதெரியாது, வீட்டிற்குள் இருந்தேன், மேகலா, பாக்கியலட்சுமி போன்ற யாரும் இல்லை, அவர்கள் அவரின் வீட்டில் இருந்தார்கள், எனது கணவரும், சுனில் என்பவரும் மதுபோதையில் வருடந்தோறும் செய்வதுபோல் வழக்கமாக எதிரிகள் பன்சன் செய்தபோது எனது கணவர் தான் மதுபோதையில் பிசரச்சனை செய்தார் என்றால் சரியல்ல, எனது கணவர் குடிக்கமாட்டார், நாங்கள் சம்பவயிடத்தில் இருந்தோம்.

5. சுனில் எதிரிகளை அசிங்கமாக திட்டி பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல, எதிரிகள் தான் எனது கணவரிடமும், சுனிலிடமும் பிரச்சனை செய்தார்கள். சுனில் தான் எனது கணவரிடம் எதிரிகளை அடிப்பதற்கு அழைத்தார், அவ்வாறு செல்லும்போது எனது கணவர் கீழே இருந்த கல்லில் தடுக்கி விழுந்து கண்ணில் அடிப்பட்டது என்றால் இல்லை, எதிரிகள் தான் கல்லால் எனது கணவரை அடித்தார்கள். புகாரில் தடி மற்றும் கற்கலால் அடித்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த கண்ணில் அடிப்பட்டது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, இடது கண்ணில் அடிப்பட்டதாக சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை, எதிரிகள் எனது கணவர் மற்றும் சுனிலை அடிக்கவும் இல்லை, திட்டவும் இல்லை, எனது கணவர் கீழே விழுந்து கண்ணில் அடிப்பட்டது என்றால் சரியல்ல, எதிரிகள் அடித்ததால் தான் கண்ணில் அடிப்பட்டது.

6. எந்த வகையான கல் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்,

கூர்மையான கல் என்று சொல்லியுள்ளேன். எனது கணவர் கேட்டுக்கொகண்டதால் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் மற்றும் எனது கணவர் தயார் செய்த புகாரில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரியல்ல. புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது, எனது கணவர் சொன்னதை நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் தான் சம்பவம் குறித்து விவரம் சொன்னேன், வழக்கறிஞர் விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 173/2024 PW-2**

Name : செல்வக்குமார்
Father / Husband name : சுப்ரமணி
Village : பாஞ்சாலம்
Age : 30
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.04.2026

A1 absent. Petition u/s 317 CrPC filed and allowed. A2, A3 present. Defence counsel present. Witness identified by HC 2735 Palanivel.

**<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் அனைவரும் எனது உறவினர் மற்றும் பங்காளிகள், எனது எதிர் வீட்டில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். எனது தெருவில் முனையில் உள்ள கிரவுண்டு அரசுக்கு சொந்தமானது அதில் பன்சன் செய்வார்கள் என்றால் சரிதான். புத்தாண்டுக்கு முந்தைய நாள் எனது தெருக்காரர்கள் அந்த கிரவுண்டில் பங்சன் செய்ய ஏற்பாடு செய்வார்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் எதிரில் பங்கன் செய்ய கொட்டகை இடம் உள்ளது என்றால் சரிதான், வருடந்தோறும் கிரவுண்டில் பங்சன் செய்வோம். எனது வீட்டின் அருகே பனைசாலை உள்ளது என்றால் சரிதான். நான் புத்தாண்டு கொண்டாடினாள் வீட்டின் முன்பு கொண்டாடுவோம் என்றால் சரிதான். அ.சா.5 சுனில் என்பவருக்கு சம்பவ சமயத்தில் 21 வயது இருக்கும் என்றால் சரிதான்.

2. இதற்கு முன்பு எதிரிகளுக்கும் எங்களுக்கும் முன்விரோதம் இல்லை என்றால் சரிதான். பாலத்தின் அருகே சுனில் வைத்த ஸ்பீக்கர் பாக்ஸ் வாடகைக்கு வாங்கிவந்தோம் என்றால் சரிதான். அதன் சவுண்டு சுமார் 2, 5 கிமீ தூரத்திற்கு கேட்கும் என்றால் சரிதான். அவ்வாறு பாட்டுப்போடுவது அருகிலிருப்பவர்களுக்கு

தொந்தரவு என்பதால் போலிசாரிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். அனுமதி பெற்று தான் பாட்டுப்போட்டோம். அவ்வாறு அனுமதிய வாங்கிய கடிதத்தை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை, எங்கள் ஊரின் பொதுவான நபர் நாட்டாமை ஜானகிராமன் அனுமதி கொடுத்ததாக சொன்னார். அவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் அடிப்பட்ட திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு செல்லும்போது நன்கு தெரிந்த 4 நபர்கள் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான், கண்ணில் இரத்தம் வந்ததால் மருத்துவமனைக்கு செல்லுமாறு சொன்னார்கள்.

3. சண்டை ஏற்படும்போது போலிசாருக்கும், ஜானகிராமனுக்கு தகவல் சொன்னோமா என்றால் ஜானகிராமனுக்கு சொன்னோம், அவர் சண்டையை மறித்துவிட்டார். அப்போது தான் எனது மனைவி வீட்டிலிருந்து வந்தார் என்றால் இல்லை, எனது மனைவி அங்கு தான் இருந்தார். சண்டை நடப்பது சம்மந்தமாக சுனில் தான் என்னை அழைத்தார் என்றால் இல்லை. எதிரிகள் அனுமதி பெற்று தான் பாட்டுப்போட்டார்கள், சுனில் அனுமதிபெறாமல் பாட்டுப்போட்டு பிரச்சனை செய்தார், அதனை கேட்டபோது சுனில் என்னிடம் சொன்னார், நானும் எனது மனைவியும் வேகமாக செல்லும்போது எனது வீட்டின் அருகே கொட்டிவைத்திருந்த கல்லை எடுக்க நான் சென்றபோது தடுமாறி கல் மீது விழுந்து எனது கண்ணில் அடிப்பட்டது என்றால் சரியல்ல. கண்ணில் அடிப்பட்ட இரத்தம் வந்ததால் என்னை மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் என்றறல் சரிதான். நான் வழக்கறிஞரிடம் ஆலோசித்துவிட்டு எதிரிகள் மீது எனது மனைவியை வைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருக்கும்போது போலிசார் எனனை விசரித்தார்களா என்றால் இல்லை, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையிலிருக்கும்போது விசாரித்தார்கள்.

4. அதன்பின்னர் 04.01.2024 அன்று எனது மனைவி மூலம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் 01.01.2024 அன்று மாலை நேரத்தில் விசாரித்தார்கள். விசாரித்து எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதன்பின்னர் போலிசார் விசாரிக்கவில்லை, முதல் விசாரணைக்கு தான் வந்தேன் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தூய்மைப்பணியாளராக வேலை செய்கிறேன். எனக்கு தற்போது கண்ணில் எந்த தொந்தரவும் இல்லை என்றால் சரியல்ல, வலது மூடினால் இடது கண்ணில் எனக்கு பார்வை மங்கலாக உள்ளது. இடது கண் மருத்துவ ஆவணம் குறித்து போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டி, கல், தடியால் அடிக்கவில்லை, கல் தடுக்கி கீழே விழுந்ததில் இடது கண்ணில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையென்றால் மருத்துவமனையில் என்னை விசாரித்தபோது புகார் பதிவு செய்திருப்பார்கள், தனியாக புகார் கொடுக்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மருத்துவமனைக்கு வந்து பார்க்காத கோபத்தில் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. சாட்சிப்பட்டியலில் உள்ளவர்கள் எனது உறவினர்கள், அவர்கள் சம்பவயிடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 173/2024 PW-3**

Name : மேகலா
Father / Husband name : திருமலை
Village : பாஞ்சாலம்
Age : 37
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.04.2026

A1 absent. Petition u/s 317 CrPC filed and allowed. A2, A3 present. Defence counsel present. Witness identified by HC 2735 Palanivel.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் அதே ஊர், தெருவை சேர்ந்தவர் என்றால் சரிதான். அ.சா2 செல்வக்குமாரின் வீட்டிலிருந்து எனது வீடு எங்குள்ளது என்றால் பாலத்தின் அருகே எனது வீடு உள்ளது, அதே தெருவில் எனது தம்பி வீடு உள்ளது. எனது வீட்டிலிருந்து கரண்ட் கொடுத்தோம் என்றால் இல்லை, மெயின் ஒயரிலிருந்து எடுத்தார்கள். அரசாங்கத்திற்கு சொந்தமான மெயின் ஒயரிலிருந்து கரண்ட் எடுத்தர்கள் என்றால் சரிதான். கனில் அவ்வாறு மெயின் ஒயரிலிருந்து கரண்ட் எடுத்தார் என்றால் சரிதான். அரசாங்க சொத்தை கனில் எடுத்ததால் அவர்மீது வழக்கு பதிவு செய்து கைது செய்வார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும். கரண்ட் எடுத்தது சம்மந்தமாக எனக்கு சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். கனில் மற்றும் சின்ன பசங்கள் ரேடியோ போட்டார்கள் என்றால் சரிதான். பசங்க சண்டை தான் பெரிதாகிவிட்டது என்றால் சரிதான்.

2. இருவரும் வெவ்வேறு பாட்டுகள் போட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். பொதுவாக புத்தாண்டு நாட்களில் பங்சன் கிரவுண்டில் செய்வார்கள் என்றால் சரிதான். அவ்வாறு சண்டை நடக்கும்போது ஊர்

நாட்டாமை ஜானகிராமன் இருந்தார் என்றால் இல்லை. அன்றையதினம் எனது கணவர் எங்கிருந்தார் என்றால் வீட்டிலிருந்தார். அன்றையதினம் எத்தனை மணிக்கு சாப்பிட்டோம் என்றால் 8 மணியளவில் சாப்பிட்டோம். பிரச்சனையின்போது புருசோத், லோகநாதன், தேனப்பன், குமார், முத்துக்கிருஷ்ணன், அன்பு ஆகியோர்கள் இருந்தார்கள், ஆனால் அவர்கள் இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்தார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சுனிலுக்கு என்ன உறவு என்றால் அத்தை. பிரச்சனையின்போது சுனில் அழைத்ததால் செல்வக்குமார் மற்றும் அவரின் மனைவி வந்தார் என்றால் சரிதான். செல்வக்குமாரின் வீட்டின் அருகே கட்டிட வேலைக்காக கற்கள் கொட்டிவைத்திருந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளை அடிப்பதற்காக கற்களை எடுக்கும்போது செல்வக்குமார் தடுக்கி கல் மீது விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3. 108 க்கு போன் செய்தோமா என்றால் இல்லை, ஆட்டோவை அழைத்தோம். எனது கணவரை மருத்துவமனைக்கு அனுப்பினேனா என்றால் இல்லை, நானும் மருத்துவமனைக்கு செல்லவில்லை. ஆட்டோவில் செல்லும்போது செல்வக்குமார் மற்றும் அவரின் மனைவி மற்றும் ஆட்டோ ஓட்டுநர் ஆகியோர்கள் சென்றார்கள் என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநரின் பெயர் என்ன என்றால் தெரியாது. பாலத்தின் அருகே சற்று இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். தேனப்பன் வீட்டின் அருகே இருட்டாக இருக்கும், வீட்டில் லைட்போட்டால் மட்டும் வெளிச்சம் வரும் என்றால் சரிதான். செல்வக்குமாரின் வீட்டிலிருந்தும் எனது வீட்டிலிருந்தும் தேனப்பன் வீட்டின் அருகே செல்லும் நபர்களை தெரியாது, இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். அதன்பின்னர் போலிசார் விசாரிக்கவில்லை, தற்போது சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரிதான்.

4. என்னை சாட்சியம் அளிப்பதற்கு போலிசார் அழைக்கவில்லை, செல்வக்குமார் மற்றும் அவரின் மனைவி தான் அழைத்துவந்தார்கள் என்றால் சரிதான். 4ம் தேதி

புகார் கொடுக்கும்போது எனது கணவர், நாட்டாமை ஜானகிராமன் ஆகியோர்கள் சென்றார்கள் என்றால் சரிதான். பச்சையப்பன், சுதாகர் ஆகியோர்கள் எனக்கு இரத்த உறவு என்றால் சரிதான். பச்சையப்பன், சுதாகர் ஆகியோர்கள் காவல் நிலையம் சென்றார்கள் என்றால் சரிதான். மற்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தின்போது நானும் எனது கணவரும் வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை, செல்வக்குமார் மற்றும் அவரின் மனைவி கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாஞ்சாலம் கிராமத்திலிருந்து சாரம் ஜிஎச் அருகில் உள்ளது, திண்டிவனம் அரசு மருத்துவமனை தூரமாக உள்ளது என்றால் சரிதான், பொதுவாக திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு செல்வோம்.

**நீதிமன்ற கேள்வி -** நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க யார் அழைத்துவந்தார்கள் என்றால் சாட்சி ரோசணை காவல் நிலைய போலிசாரை கை நீட்டி காண்பித்தார்கள். சம்பவம் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை, நான் முண்டியம்பாக்கம் மருத்துவமனையிலிருந்து அரவிந்த் மருத்துவமனைக்கு சென்ற பிறகு முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் போலிசார் விசாரித்ததாக சொன்னார்கள். அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.